சார்பு நீதிமன்றம் மேட்டுப்பாளையம்

ஓ.எஸ்.எண்.92/2020

2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 01ம் நாள் வா.சா.1 என்பவரது சாட்சிய வாக்குமூலம் (1873 ம் ஆண்டு 10 ஆவது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. தினேஷ் குமார், இளநிலை உதவியாளர், என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | வயது | 54 |
| த/பெ | ரங்கசாமி | வட்டம் | மேட்டுப்பாளையம் |
| விலாசம் | பிள்ளையார் கோவில் வீதி, காரமடை | மாவட்டம் | கோவை |
| | | தொழில் | விவசாயம் |

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**:

தாவா சொத்தின் ஒரு பகுதி எனது அப்பா இரங்கசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரி தான். தாவா சொத்தின் ஒரு பகுதியை மாதையனுக்கு எந்த தேதியில் விற்பனை செய்யப்பட்டது என்று எனக்கு தற்போது வரை தெரியாது. அவ்வாறு விற்பனை செய்த ஆவணங்களை இன்று வரை நான் பார்க்கவில்லை. எனது அப்பா மாதையனுக்கு விற்பனை செய்த கிரைய ஆவணத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் மாதையனுக்கு விற்பனை செய்ததால் தான் அதை பற்றி எந்த விபரமும் தெரிந்து கொள்ள நான் முயற்சிக்க வில்லை என்றால் சரி அல்ல. தாவா சொத்தின் ஒரு பகுதிக்கான வருவாய் ஆவணங்கள் இரங்கசாமியின் பெயரில் இருந்து மாதையனின் பெயருக்கு மாறி விட்டன என்றால் எனக்கு தெரியாது. அதன் பிறகு வருவாய் ஆவணங்கள் 4 ஆம் பிரதிவாதி செந்தில் குமார் பெயருக்கு ஏற்பட்டு தற்போது வரை 4 ஆம் பிரதிவாதியின் பெயரில்

தான் வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் எனக்கு தெரியாது. சுமார் 52 ஆண்டுகளுக்கு மேலாக தாவா சொத்திற்கான வருவாய் ஆவணங்கள் அனைத்தும் மாதையன் பெயரிலும் அதன் பிறகு 4 ஆம் பிரதிவாதியின் பெயரில் தான் உள்ளன என்றால் எனக்கு தெரியாது. என் அப்பா இறந்த பின்னர் தான் தெரியும். புல எண். 281/1 A ல் தற்போது வரை 4 ஆம் பிரதிவாதி விவசாயம் செய்து வந்து அவர் பெயரில் தான் வருவாய் ஆவணங்கள் உள்ளன என்றால் எனக்கு தெரியாது. புல எண். 281/1 A 1 ஐ எனது சகோதரரான இராஜப்பன் விவசாயம் செய்து வந்து அவரது பெயரில் தான் அடங்கல் உள்ளன என்றால் கூட்டு விவசாயம் தான் செய்து வந்தோம். என்னை ஏமாற்றி அவரது பெயருக்கு மாற்றிக் கொண்டார்கள். என்னை ஏமாற்றி வருவாய் ஆவணங்கள் மாற்றிக் கொண்டதாக அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் இந்த வழக்கை தாக்கல் செய்து உள்ளேன். தாவா சொத்தின் ஒரு பகுதி சொத்துக்கள் 4 ஆம் பிரதிவாதிக்கும் ஒரு பகுதி 1 மற்றும் 5 ஆம் பிரதிவாதிக்கும் பாத்தியப்பட்டது என்பதை நன்கு தெரிந்து கொண்டதால் தான் நான் எந்த நடவடிக்கையும் எடுக்க வில்லை என்றால் சரி அல்ல. எனது தாத்தா, அப்பா மற்றும் அண்ணன் ஆகியோர்கள் கிரையம் கொடுத்ததாக சொல்வது எனக்கு நேரில் தெரியாது என்றால் சரி தான். அவர்கள் எந்த சூழ்நிலையில் விற்பனை செய்தார்கள் என்றும் அந்த பணத்தை எவ்வாறு பாகம் செய்து கொண்டார்கள் என்ற விபரமும் எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது அப்பாவும் 1 ஆம் பிரதிவாதியும் மட்டுமே கிரையம் பெற்று உள்ளார்கள் என்றால் சரி அல்ல. தாவா சொத்திற்கான கிரைய பத்திரம் யார் பெயரில் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து எனது அப்பா இரங்கசாமிக்கும் எனது

அண்ணன் 1 ஆம் பிரதிவாதியான இராஜப்பனுக்கும் தனித்த சொத்து என்றால் பூர்வீக சொத்தை விற்பனை செய்து வந்த பணத்தை வைத்து தான் தாவா சொத்தை வாங்கினார். எனது தாத்தா, அப்பா மற்றும் எனது அண்ணன் ஆகிய மூவரும் சேர்ந்து தான் சொத்தை விற்பனை செய்தார்கள் என்றால் அவர்கள் விற்பனை செய்தது பற்றி எனக்கு தெரியாது. எனது தாத்தா, அப்பா மற்றும் 1 ஆம் பிரதிவாதி ஆகியோர்கள் யார் யாருக்கு கிரையம் கொடுத்தார்கள் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்துக்கள் அவர்கள் மூவருக்கும் மட்டுமே பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தான் அவர்கள் விற்பனை செய்து உள்ளார்கள் என்றால் சரி அல்ல. இராமைய கவுடர் சொத்தை விற்பனை செய்த வகையில் வந்த பணத்தை கொண்டு சொத்துக்கள் வாங்கினார் என்று காட்ட ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி அல்ல. இராமைய கவுடர் ரூ.3, 000/- விற்பனை செய்து வந்த பணத்தில் ரூ. 1, 000/- ஐ அவரது பங்காக பெற்றுக் கொண்டு அந்த பணத்தை தனியாக வைத்துக் கொண்டார் என்றால் சரி அல்ல. எனது அப்பாவும் 1 ஆம் பிரதிவாதியும் அவர்களுக்கு வந்த ரூ. 2, 000/- பணத்தை வைத்து தான் தாவா சொத்தை கிரையம் வாங்கினார்கள் என்றால் சரி அல்ல. தாவா சொத்தில் எனது அப்பா இரங்கசாமிக்கும் 1 ஆம் பிரதிவாதி இராஜப்பனுக்கும் மட்டுமே பாத்தியம் என்றால் சரி அல்ல. எனது அப்பா இரங்கசாமி தான் கூட்டுக் குடும்ப கர்த்தா என்ற முறையில் பராமரித்து வந்தார் என்றால் சரி தான். சொத்தை விற்பனை செய்த 1969 ஆம் வருடத்தில் எனக்கு எத்தனை வயது இருக்கும் என்றால் அப்போது நான் குழந்தையாக இருந்தேன். அதனால் எனக்கோ வாதிகளுக்கோ சம்பாதிக்கும் திறன் யாருக்கும் இல்லை என்றால் சரி தான்.

வாதிகள் ஆகிய நாங்கள் குழந்தைகளாக இருந்ததால் எனது அப்பா தான் எங்களை பராமரித்து வந்தார் என்றால் சரி தான். எனது அப்பா குடும்பத்தை பராமரித்து காப்பாற்ற யாரிடம் கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். அப்போது எனது அப்பா நல்ல வசதியாக இருந்ததால் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் என்ன வசதியாக இருந்தார், யாரிடம் கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரி தான். குடும்ப செலவுகளுக்காக எனது அப்பா தாவா சொத்தை மாதையன் என்பவரிடம் கடன் பெற்றுக் கொண்டு அடமானம் வைத்து இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. மாதையனிடம் கடன் உறுதிச் சீட்டு அடிப்படையிலும் எனது அப்பா கடன் பெற்று இருந்தார் என்றால் எனக்கு தெரியாது. அவ்வாறு அடமானக் கடன் மற்றும் கடன் உறுதிச் சீட்டு அடிப்படையிலான கடன்களுக்கு 31.12.1969 அன்று எழுதி 1/1970 ஆம் ஆவண எண்ணாக கிரையம் செய்து கொடுத்தார் என்றால் சரி அல்ல. தாவா சொத்து அவரது தனிப்பட்ட சொத்து என்பதாலும் தான் பெற்ற கடனுக்காக அதனை விற்பனை செய்து விட்டதாலும் தாவா சொத்தில் பங்கு கேட்க எங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரி அல்ல. எனது அப்பா எந்த சூழ்நிலையில் கடன் வாங்கினார் என்றும் எந்த சூழ்நிலையில் கிரையம் கொடுத்தார் என்ற விபரத்தையும் மாதையனுக்கு எழுதி கொடுத்த கிரைய ஆவணத்திலேயே தெளிவாக குறிப்பிட்டு உள்ளார் என்றால் சரி அல்ல. அந்த கிரைய ஆவணத்தை நான் இது வரை படித்து பார்காததால் அதில் என்ன உள்ளது என்று இது வரை எனக்கு தெரியாது என்றால் சரி தான். அந்த சொத்தை விற்பனை செய்து சுமார் 48 ஆண்டுகள் கழித்து தான் எனது அப்பா இறந்து உள்ளார் என்றால்

எனக்கு தெரியாது. எனது அப்பா எந்த தேதி, மாதம் மற்றும் வருடத்தில் இறந்தார் என்று எனக்கு தெரியாது. சுமார் 5 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்தார். மாதையனுக்கு விற்பனை செய்த சுமார் 48 ஆண்டுகளுக்கு பின்னர் தான் இறந்தார் என்றால் சரி தான். எனது அப்பா விற்பனை செய்த பின்னர் தாவா சொத்தில் விவசாயம் செய்தது இல்லை என்றால் சரி அல்ல. எனது அப்பா விவசாயம் செய்தார் என்று காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். எனது அப்பா உயிருடன் இருந்த போது நான் பங்கு கேட்டேனா என்றால் கேட்டேன். நான் கேட்டதற்கு ஆவணம் ஏதாவது உள்ளதா என்றால் எனது அப்பாவும் தருவதாக சொன்னதால் ஆவணம் இல்லை. எனது அப்பா உயிருடன் இருந்த போதே தாவா சொத்தை மாதையனுக்கு விற்பனை செய்தது எனக்கு நன்கு தெரியும் என்றால் சரி அல்ல. எனது அப்பா உயிருடன் இருந்த போதே தாவா சொத்தின் ஒரு பகுதியை மாதையன் 4 ஆம் பிரதிவாதிக்கு 19.08.2015 அன்று விற்பனை செய்து விட்டார் என்றால் எனக்கு தெரியாது. 4 மற்றும் 5 ஆம் பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த விபரம் எனக்கு நன்கு தெரியும் என்றும் சொத்தின் மதிப்பு அதிகரித்து விட்டதால் அதனை அபகரிக்க வேண்டும் என்பதற்காக வழக்கை தாக்கல் செய்து உள்ளேன் என்றால் சரி அல்ல. எந்த காலத்திலும் நாங்கள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இல்லை என்றால் சரி அல்ல. எவ்வித உரிமையும் இல்லாமல் பொய்யான சங்கதிகளுடன் பொய் வழக்கு தாக்கல் செய்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரி அல்ல.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

ஒம்/- கா. கெங்காராஜ்.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.